செ.வெ.எண் :: 875 நாள் : 7.10.2010.

செய்தி வெளியீடு – 7.10.2010

# இலங்கையில் நடந்த போரில் பாதிக்கப்பட்டு கும்மிடிப்பூண்டி முகாமில் தங்கியுள்ள திருமதி தவமணி தேவியின் குழந்தைகளுக்கு மருத்துவ சிகிச்சைகளுக்காக 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

கடந்த ஆண்டு இலங்கையில் நடந்த போரின்போது வவுனியா பகுதியில் வாழ்ந்த திருமதி தவமணிதேவி என்பவரின் மகன் பிரகாஷ், மகள் சந்திரவதனா ஆகியோர் பலத்த காயமடைந்து, அதன் காரணமாக மனநிலை பாதிக்கப்பட்டனர். அந்நிலையில், திருமதி தவமணிதேவி தமது குடும்பத்தினருடன் தமிழகம் வந்து மண்டபம் முகாமிலும், பின்னர் மதுரை கூடல் புதூர் முகாமிலும் தங்க வைக்கப்பட்டு, கடந்த நான்கு மாதங்களாக திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி முகாமில் தனது 90 வயது தந்தை, மகன் பிரகாஷ், மகள் சந்திரவதனா ஆகியோருடன் உள்ளார்.

திருமதி தவமணிதேவியின் மகன் பிரகாஷ், மகள் சந்திரவதனா ஆகிய இருவரும் உடல்நிலையும், மனநிலையும் பாதிக்கப்பட்ட நிலையில் அவதிப்படுவதாக தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, திருமதி தவமணி தேவி தனது குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து சிறப்பு நேர்வாக 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (7.10.2010) ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.